தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-4-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றிய ஏப்ரல் (2017) மாதத்திற்கான முன்னறிவுப்பு**

**நெற்பயிர்**

நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு, தண்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் வேப்பங்கொட்டை சாறு 5 % தயாரித்து ஒட்டும் திரவம் லிட்டருக்கு 2.5 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறிய விளக்குப் பொறிகள் எக்டருக்கு 2.5 என்ற எண்ணிக்கையில் அமைக்கவும். அதிக சேதம் இருக்கும் பட்சத்தில் பாஸ்போமிடான் 40 எஸ் எல் 562 மி.லி அல்லது புரோபனோபாஸ் 50 ஈ.சி எக்டருக்கு 1000 மி.லி. தெளிக்கவும்.

தமிழ்நாட்டில் நெல் விளையக்கூடிய பெரும்பாலான மாவட்டங்களில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 400-500 கிராம் / ஏக்கர் என்ற முறையில் கலந்து 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் நோய் தாக்குதலுக்கேற்ப தெளிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**பருத்தி**

கடைசியாக பஞ்சு எடுத்த வயலின் எஞ்சிய கழிவுகளை சேகரித்து தொழு உரத்திற்கோ அல்லது காகித தொழிற்சாலைக்கோ பயன்படுத்திக் கொள்ளலாம். பருத்தி கட்டைகளை அறுவடை செய்த வயலில் குவித்து வைப்பதை தவிர்த்தல் வேண்டும். செடியில் உள்ள வெடித்த காய்களை சேகரித்து அழிக்கவும். சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலம் இளஞ்சிவப்பு காயப்புழுக்களின் தாக்குதலை அடுத்த பருவத்திற்கு பரவாமல் தடுக்கலாம். இவற்றை கட்டுப்படுத்த எக்டருக்கு புரோபினோபாஸ் 50 % இ.சி. 1500 மிலி (அ) டிரையோசோபாஸ் 40 இ.சி. 2500 மிலி (அ) குயினால்பாஸ் 25 இசி 2000 மிலி (அ) தையோடிகார்ப் 75 % டபிள்யூ பி 1000 கி தெளிக்கவும். இவற்றை இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

**மக்காச்சோளம்**

மக்காச்சோளத்தில் தண்டு துளைப்பான் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவை ஏற்படின், கார்போபியுரான் 3 ஜி 17 கிலோ / எக்டர் என்ற அளவில் 50 கிலோ மணலுடன் கலந்து குருத்தில் இடவும்.

**தக்காளி**

தக்காளியில் இலைப்புள்ளி மற்றும் இலைக்கருகல் நோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மான்கோசெப் என்ற மருந்தை, ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமிருமுறை தெளிக்கவும். புள்ளி வாடல் நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் 2 மில்லி வேப்பெண்ணெயை கலந்து தெளிக்க வேண்டும். மேலும் ஹெக்டருக்கு மஞ்சள் நிற ஒட்டு பொறியை 15 என்ற அளவில் அமைக்க வேண்டும் மற்றும் மெத்தில் டெமட்டான் அல்லது டைமீத்டோயேட் என்ற மருந்தை ஹெக்டருக்கு 500 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**மிளகாய்**

மிளகாயில் இலைசுருள் நோயை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு மஞ்சள் நிற ஒட்டு பொறியை 15 என்ற அளவில் அமைக்க வேண்டும் மற்றும் டைமீத்டோயேட் அல்லது மெத்தில் டெமட்டான் என்ற மருந்தை லிட்டருக்கு 2 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**மாம்பழம்**

மாம்பழத்தில் பழ அழுகல் நோய் (பறவைக்கண் நோய்) பரவலாக தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த லிட்டருக்கு கார்பன்டாசிம் 1கி (அ) மேன்கோசெப் 2கி என்ற அளவில் கலந்து பூக்கும் பருவம் மற்றும் பிஞ்சுபருவத்தில் இருமுறை 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

**பப்பாளி**

பப்பாளியில் வளையப் புள்ளி வைரஸ் நச்சுயிரி நோய் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்தஇ நடவு செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பு இரு வரிசைகளில் மக்காச்சோள பயிரை தோட்டத்தைச் சுற்றி நடவும். பூச்சிகளைக் கட்டுப்படுத்த, மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறியை ஹெக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும். மேலும் லிட்டருக்கு வேப்பெண்ணெய் 1 மி.லி (அல்லது) அசிபேட் 1.5 மி.லி (அல்லது) இமிடாக்ளோபிரிட் 0.75 மி.லி என்ற அளவில் கலந்து நடவிலிருந்து நான்கு மாதம் வரை 1 மாத இடைவெளியில் தெளிக்கவும். நட்ட நான்காவது மற்றும் ஏழாவது மாதத்தில் 5 கிராம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 கிராம் போரிக் அமிலம் 1 லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**கரும்பு**

கரும்பில் தண்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதை கட்டுப்படுத்த *டிரைக்கோகிரம்மா* முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் எக்டருக்கு 1 சி.சி என்ற அளவில் 6 தடவை வெளியிட வேண்டும்.

கம்பளி அசுவுணித் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது விவசாயிகள் பயிர்களில் உள்ள இயற்கை எதிரிகளை பாதுகாக்க இரசாயன பூச்சிக்கொல்லிகளை உபயோகிக்க வேண்டாம் என்று அறிவுருத்தப்படுகிறது.

**முந்தரி**

கடலூர் மாவட்டத்தில் முந்தரியில் கொசு ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. கொசு தாக்குதலை கட்டுப்படுத்த கை தெளிப்பான் கொண்டு புரோபினோபாஸ் (0.05 சதம்) (அ) குளோரிபைரிபாஸ் (0.05 சதம்) பூக்கும் தருணத்தில் தெளிக்கவும்.

**தென்னை**

தென்னையில் வெள்ளை ஈக்களின் பாதிப்பு பொள்ளாச்சி பகுதிகளில் பரவலாக தென்படுகிறது. இரைவிழுங்கி பூச்சிகளும் வெள்ளை ஈக்களுடன் சேர்ந்து காணப்படுகிறது. தேவை ஏற்படின், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக பூச்சியியல் துறையை அணுகி இரைவிழுங்கியினைப் பெற்று ஒரு முறை பரவலாக தோப்புகளில் விடுவதால் அவை பெருகி வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஏதுவாகும் .

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்